


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## நவம்பர் - 23.11.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- பாதுகாப்பு செய்திகள்
- விளையாட்டு நிகழ்வுகள்












We Shine Academy

## தமிழக நிகழ்வுகள்

- **தமிழகத்தின் புதிய மாவட்டமான தென்காசி மாவட்டத்தினை தொடங்கி வைத்தார் முதல்வர் பழனிச்சாமி** அவர்கள்.
  - கடந்த ஜூலை மாதம் 18-ம் தேதி சட்டப்பேரவை விதி எண் 110-ன் கீழ் தென்காசியை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது.
  - **தேர்வுத் துளிகள்**
    - திருநெல்வேலி மாவட்டம் ஆங்கிலேயர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது.
    - 1986-ம் ஆண்டு எம்.ஜி.ஆர் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி மாவட்டம் உதயமானது.
    - தென்காசி மாவட்டத்தில் 2 வருவாய் கோட்டங்களும், 8 வட்டங்களும், 10 ஊராட்சி ஒன்றியங்களும், 224 கிராம ஊராட்சிகளும், 5 சட்டபேரவை தொகுதிகளும் உள்ளடங்கியுள்ளன.

## தேசிய நிகழ்வுகள்

- **பயங்கரவாதத்துக்கு எதிரான ஒருங்கிணைந்த செயல்பாடு - இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையே ஒப்பந்தம்** கையெழுத்தானது.
  - இது தொடர்பான ஒப்பந்தம் இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்துறை அமைச்சர்

புலாத் போபோ ஜோனாவ் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

- **தேர்வுத் துளிகள்**
  - பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள், குற்றங்களை தடுப்பது, கடத்தல் சம்பவங்களை தடுப்பது உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தம் போடப்பட்டது.
  - பிரதமர் மோடி கடந்த 2015, 2016-ம் ஆண்டுகளில் இந்தியா – உஸ்பெகிஸ்தான் உறவை மேம்படுத்த அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டார்.

- **இந்தியாவின் மிக இளம் வயது நீதிபதியாக ஜெய்ப்பூரைச் சேர்ந்த மயங்க் பிரதாப் சிங் 21 வயதில் தேர்வாகி சாதனை படைத்துள்ளார்.**
  - நீதித்துறை சேவைக்கான தேர்வு எழுத 23 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என்று இருந்தது.
  - இந்நிலையில் அந்த தேர்வெழுதும் வயதை 21-ஆக குறைத்து ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

## விருதுகள்

- **சிறந்த செயல்பாட்டுக்காக தமிழக அரசுக்கு 3 விருதுகள் தனியார் பத்திரிக்கை நிறுவனம் "இந்தியா டுடே" வழங்கியுள்ளது.**
  - இந்திய மாநிலங்களில் சட்டம் ஒழுங்கில் சிறந்த பராமரிப்பு மற்றும் முன்னேற்றம் அடைந்த மாநிலத்திற்கான விருது

We Shine Academy™

தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டது.

- மத்திய சுற்றுச்சூழல் மற்றும் தகவல் ஒலிப்பரப்பு துறை அமைச்சர் பிராகாஷ் ஜாவடேகர் வழங்கினார்.
- **தேர்வுத் துளிகள்**
    - மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொலைநோக்கு பார்வையுடன் “2023 விஷன்” எனும் ஆவணத்தை தயாரித்தார்.
    - சட்டம் ஒழுங்கு பராமரிப்பு அதின் முக்கிய அம்சமாகும்.

## பாதுகாப்பு செய்திகள்

- **இந்திய கடற்படையின் முதல் பெண் விமானி என்ற பெருமையை ஷிவாங்கி பெற்றுள்ளார்.**
    - பிஹார் மாநிலம் முசாபர்பூரை சேர்ந்த இவர் கடந்த ஜுன் மாதம் இந்திய கடற்படையில் சேர்ந்தார்.
    - டிசம்பர் மாதம் 2-ம் தேதி முதல் கடற்கடையின் டோர்னியர் விமானத்தை இயக்க உள்ளார்.
    - **தேர்வு துளிகள்:**
        - இந்தியாவின் 5-வது கடற்படை டோர்னியர் விமானப்படை தளம் கடந்த ஜுலை மாதம் சென்னையில் அமைக்கப்பட்டது.
        - இந்தியாவின் தற்போதைய கடற்படை தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் ஆவார்.

## விளையாட்டு செய்திகள்

We Shine Academy™

- **இந்தியா டெஸ்ட் அணி விளையாடும் வரலாற்று சிறப்பு மிக்க பகலிரவு – டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில்** தொடங்கியது.
    - போட்டியை வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.
    - **தேர்வுத்துளிகள்**
        - பிசிசிஐ-யின் புதிய தலைவராக கடந்த மாதம் கங்குலி பொறுப்பேற்று கொண்டார்.
        - இந்திய அணி விளையாடும் முதல் பகலிரவு டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது.

## திருக்குறள்

**குறள் எண் : 26**

அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**

**செயற்கரிய செய்கலா தார்.**

**விளக்கம்** : பிறர் செய்வதற்கு முடியாத செயல்களைச் செய்பவரே மேன்மக்கள் செய்ய முடியாதவரோ சிறியவரே.